| | | |
|---|---|---|
| ආයතනයේ නම | : | ජනලේඛන හා සංඛ්‍යාලේඛන දෙපාර්තමේන්තුව |
| පාර්ලිමේන්තු ප්‍රකාශනමාලා අංක | : | 489 |

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ සහ ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

| | | |
|---|---|---|
| **நிறுவனத்தின் பெயர்** | : | **தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்** |
| **பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்** | : | **489** |

**பாராளுமன்ற பொது கணக்கு குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக கௌரவ நிதிஇ திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் நிலையியல் கட்டளை இலக்கம் 119(4)-இன் கீழ் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் சமர்ப்பிப்பு**

| | | |
|---|---|---|
| **Name of the Institution** | : | **Department of Census and Statistics** |
| **Parliamentary Series** | : | **489** |

**Submission of the observations and measures taken by Hon. Minister of Finance, Planning and Economic Development under Standing Order No. 119(4) regarding the report tabled by the Committee on Public Accounts of Parliament, to the Parliament**

මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: MF06/10//PS/489
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2026.06 , 08

கௌரவ பாராளுமன்ற சபைத்தலைவர் ஊடாக,
மாண்புமிகு சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்
ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே

**அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் தொடர்பாக பொதுக் கணக்குகள் குழுவினால் (COPA) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிதித்துறைக்கு பொறுப்பான அமைச்சரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானங்கள் சமர்ப்பிக்கப்படுதல்**

**பொதுக் கணக்குகள் குழு அறிக்கையின் பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 489**

நிலையியற் கட்டளை இலக்கம். 119(4) இன் பிரகாரம், பொதுக் கணக்குகள் குழுவால் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்த பின்னர், பொதுக் கணக்குகள் குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் / பரிந்துரைகள் / உத்தரவுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை உரிய அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அதன்படி, பத்தாவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வின் போது நடத்தப்பட்ட தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மீதான விசாரணையின் அடிப்படையில் பொதுக் கணக்குகள் குழு (COPA) தொகுத்த அறிக்கை , பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 489-இல் அடங்கியுள்ளது. மாண்புமிகு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஆகிய நான் எனது தகுதிக்குட்பட்ட வகையில், இவ்விடயம் தொடர்பாக எனது கருத்துக்களையும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய அறிக்கையை இதன்மூலம் சமர்ப்பிக்கிறேன்.

பொதுக் கணக்குகள் குழுவால் தொகுக்கப்பட்ட அறிக்கையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தொடர்பான பரிந்துரைகள் தொடர்பாக அத்திணைக்களத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் பரிந்துரைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன என்ற உண்மையை மாண்புமிகு பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகினறேன்

**ஒப்பம்**
**அநுர குமார திசாநாயக்க**
**நிதி ,திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் : 489

திணைக்களத்தின் பெயர் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் குழுவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக, நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.**

| இலக்கம் | அறிக்கையில் குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை சரிசெய்வதற்காக நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 1. | **சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பு - 2021 ஆம் ஆண்டு** | சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பிற்கான தொகைமதிப்பு தினமாக 2024.12.19 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, தொகைமதிப்பின் கணக்கிடும் கட்டத்திற்கான களப்பணிகள் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. அதன்படி,<br><br>**01. சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பின் ஆரம்ப அறிக்கை**<br><br>2025.03.24 ஆம் திகதி – சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பின் ஆரம்ப அறிக்கை வெளியிடப்பட்டு, மேன்மைதங்கிய ஜனாதிபதியவர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலும், அந்த ஆரம்ப அறிக்கை திணைக்களத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டதுடன், அதன் அச்சுப் பிரதிகள் மாவட்டச் செயலாளர்களுக்கும் மாவட்ட புள்ளிவிபரப் பிரிவு பிரதானிகளுக்கும் வழங்கப்பட்டன.<br><br>**02. சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பின் அடிப்படை தகவல்**<br>2025.10.30 ஆம் திகதி – (1) சனத்தொகை தொடர்பான ஆரம்பத் தகவல்கள் (மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளின்படி)<br><br>(2) சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொடர்பான ஆரம்பத் தகவல்கள் (மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளின்படி)எனும் இரண்டு அறிக்கைகளும் வெளியிடப்பட்டன.<br><br>மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட இவ்வறிக்கைகள் வெளியிடப்பட்ட அதே நாளில் திணைக்களத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. மேலும், அவற்றுடன் தொடர்புடைய அனைத்து தரவு அட்டவணைகளும் PDF மற்றும் Excel வடிவங்களில் மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு மட்டங்களில் திணைக்களத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டன.<br>திட்வா சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்த நிலையை முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான தரவு அட்டவணைகள் மற்றும் வரைபடங்களும் திணைக்கள இணையதளத்தில் வெளியிடப்பட்டன.<br><br>இவ்வறிக்கைகள் வெளியிடப்பட்டதனுடன் இணைந்து, அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பிரதானிகளையும், ஊடகவியலாளர்களையும் அறிவூட்டுவதற்கான தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.<br><br>**03. சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பின் இறுதி அறிக்கை**<br>2026.03.20 அன்று சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டதுடன், அது 2026.04.06 அன்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து மேன்மைதங்கிய ஜனாதிபத அவர்களிடம் உத்தியோகபூர்வமாக |

| | | |
|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டது.<br>2026.04.10 அன்று, இறுதி அறிக்கையில் உள்ள தகவல்களை பரப்புவதற்கும், தரவு பயனாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை அறிவூட்டுவதற்கும் ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதே நாளில், கணக்கெடுப்பு தகவல்களை உள்ளடக்கிய தரவு டாஷ்போர்டு (data dashboard) ஒன்று தயாரிக்கப்பட்டு திணைக்களத்தின் இணையத்தளத்தில் இணைக்கப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் அதுகுறித்து அறிவிக்கப்பட்டது.<br><br>இந்த அறிக்கை மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு திணைக்களத்தின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 2. | **2021 ஆம் ஆண்டிற்கான சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பு, பொருளாதார கணக்கெடுப்பு, குடும்ப அலகுகளின் வருமான மற்றும் செலவுக் கணக்கெடுப்பு (HIES) மற்றும் சமூக மற்றும் சுகாதாரக் கணக்கெடுப்பு (DHS) நடத்தப்படாமை.** | சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், குடும்ப வருமான மற்றும் செலவுக் தொகைமதிப்பிற்கான மாதிரியைத் தயாரிப்பதற்கு தேவையான தரவுகள் 2024.12.30 அன்று வழங்கப்பட்டிருந்தன.<br><br>அதன்படி, குடும்ப வருமான மற்றும் செலவுக் கணக்கெடுப்பு 2025 ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கணக்கெடுப்பின் களத் தரவு சேகரிப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டு 2026 ஜனவரி மாதத்தில் நிறைவு பெற்றன. தற்போது தரவு உள்ளீடு மற்றும் திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இறுதி அறிக்கை 2026 ஒக்டோபர் மாதத்தில் வெளியிடப்பட திட்டமிடப்பட்டுள்ளது. |
| 3. | **“இ-கிராம உத்தியோகத்தர்” திட்டம் (e-GN Project) சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பிற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் பயன்படுத்தும் தரவு சேகரிப்பு படிவத்தின் மூலம் சேகரிக்கப்படும் அனைத்து தரவுகளும் “இ-கிராம உத்தியோகத்தர்” திட்டம் (e-GN Project) தொடர்பாக கிராம அலுவலர்களினாலும் வேறு ஒரு படிவத்தைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்டு வருவதாகவும், சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பிற்காக சேகரிக்கப்படும் தரவுகளுக்கு மேலதிகமாக “இ-கிராம அலுவலர்” திட்டத்திற்காக மிகச் சிறிய அளவிலான மேலதிக தரவுகள் மட்டுமே கிராம அலுவலர்களால் சேகரிக்கப்படுகின்றன என்பதும் வெளிப்படுத்தப்பட்டது.** | சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பு, தொகைமதிப்பு கட்டளைச் சட்டத்தின் விதிகளின் கீழ் நடத்தப்படுகிறது. அதன்படி, தொகைமதிப்பு கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக, தொடர்புடைய தரப்பினரின் கோரிக்கையின் பேரில் e-Grama Niladhari திட்டத்திற்காக சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பு தரவுகளை வழங்குவதற்கான வாய்ப்பு உள்ளது.<br><br>“இலங்கையில் புள்ளிவிபர அபிவிருத்தி மூலோபாயம்” (Strategy for the Development of Statistics in Sri Lanka) தயாரித்தல் மற்றும் புள்ளிவிபரச் சட்டம் வரைதல் தொடர்பான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 4. | **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் திட்டம் 2016-2025 2021** | சனத்தொகை மற்றும் வீட்டுவசதி தொகைமதிப்பு 2021, CAPI (Computer-Assisted Personal Interviewing) தொழில்நுட்பத்துடன் கூடிய டேப்லெட் கணினிகளை பயன்படுத்தி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பொருளாதார கணக்கெடுப்பு (விவசாய செயல்பாடுகள்) மற்றும் பொருளாதார கணக்கெடுப்பு (விவசாயம் அல்லாத செயல்பாடுகள்) உள்ளிட்ட கணக்கெடுப்புகளையும் CAPI தொழில்நுட்பம் கொண்ட டேப்லெட் கணினிகள் மூலம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், எதிர்காலத்தில் நடைபெறும் பெரும்பாலான ஆய்வுகளுக்கான தரவு சேகரிப்பும் இந்த CAPI தொழில்நுட்பத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. |

**5.** **தனிநபர், குடும்ப அலகு செலவு**

2019 குடும்ப அலகு வருமான மற்றும் செலவுக் கணக்கெடுப்பின் (HIES) படி, சராசரி மாதாந்தம் ஒருவருக்கு ஏற்படும் குடும்ப அலகு செலவு சுமார் ரூ.17,000 ஆகும். இந்த கணக்கெடுப்பு ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும். 2021 சனத்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு முடிந்த பின்னர், அந்த புதிய கணக்கெடுப்பு கட்டமைப்பைப் பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டில் HIES கணக்கெடுப்பை நடத்த திட்டமிடப்பட்டது. எனினும், சனத்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு 2024 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டதால், அந்த புதிய கட்டமைப்பைப் பயன்படுத்தி குடும்ப அலகு வருமான மற்றும் செலவுக் கணக்கெடுப்பு 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. தற்போது அதன் தரவுகளின் துல்லியத்தைக் சரிபார்த்தல் மற்றும் தரவு செயலாக்க பணிகள் நடைபெற்று வருகின்றன. அதனால், சராசரி மாதாந்தம் ஒருவருக்கு ஏற்படும் குடும்ப அலகு செலவு, தேசிய நுகர்வோர் விலை குறியீட்டின் அடிப்படையில் விலை மாற்றங்களை கருத்தில் கொண்டு (பணவீக்கத்துக்கு ஏற்ப சரிசெய்து) 2021 முதல் 2025 வரை மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்புகள் கீழ்காணும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.

| வருடம் | **HIES * 2019** | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|---|---|---|
| மதிப்பிடப்பட்ட சராசரி மாதாந்தம் ஒருவருக்கு ஏற்படும் குடும்ப அலகு செலவு – ரூபாய் | 17,000 | 19,000 | 34,000 | 39,000 | 40,000 | 41,000 |

* HIES - Household Income and Expenditures Survey

மேலும் குடிவிபரவியல் மற்றும் சுகாதார கணக்கெடுப்பை மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் 2026 வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், கணக்கெடுப்பை இவ்வருடம் மேற்கொள்வதற்குத் தேவையான திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுவருகிறது.

**6.** **உலக வங்கி உதவியும் அரச நிதியும் பயன்படுத்தி, திணைக்களத்திற்காக 2015 ஆம் ஆண்டில் 12 மாடிகள் கொண்ட கட்டிடம் ஒன்றை கட்டி, அதன் அலுவலக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**
கட்டிடம் நிர்மாணத்திற்கான முழுமையான அறிக்கை மற்றும் பொறுப்பு சான்றிதழை ஒப்பந்ததாரரிடமிருந்து பெறுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்காமை. நிர்மாணப் பணிகள் நிறைவடைய இன்னும் 2 வார காலம் இருந்தபோதும்,

<u>கட்டிடத்தின் தொழில்நுட்ப கணக்காய்வு மேற்கொள்ளுதல்</u>

இந்த திணைக்களத்தின் பிரதான அலுவலகக் கட்டிடத்தில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக, கட்டிடம்/தொழில்நுட்ப கணக்காய்வு மேற்கொள்ளும் நோக்கில் பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனை நிறுவனம் (CECB) மூலம் மதிப்பீடுகள் கோரப்பட்டன.

இதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூ.12,458,000.00 (வரி இல்லாமல்) தொடர்பாக தீர்மானம் எடுக்க, திணைக்கள அதிகாரிகளும், கட்டிடத் திணைக்களத்தின் ஒரு பொறியியலாளரும் அடங்கிய மதிப்பீட்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

அந்த குழுவினால் வழங்கப்பட்ட அறிக்கைக்கு ஏற்ப, இந்த பணியை மேற்கொள்ள ஒரு ஆலோசனை நிறுவனத்திடமிருந்து மதிப்பீடு பெறப்பட்டு, எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது பொருத்தமானது என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், கட்டிடம்/தொழில்நுட்ப

| | | |
|---|---|---|
| | **பிடித்துவைத்த தொகையின் 88% ஆக ரூ.35,673,850.00 ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டுள்ளதாகவும், மழைக்காலங்களில் மேல்மாடிகளில் நீர் கசிவு ஏற்பட்டு உள் அலுவலக பகுதிகளுக்குள் நீர் புகுதல், இதுபோன்ற குறைபாடுகள் கணக்காய்வில் கண்டறியப்பட்டுள்ளன.** | கணக்காய்வு மேற்கொள்ளும் நோக்கில் ஒரு நிறுவனம் தேர்வு செய்வதற்கான விவரக்குறிப்புகள் தயாரிப்பதில் தமக்கு திறன் இல்லையென கட்டிடத் திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட பொறியியலாளர் வாய்மொழியாக அறிவித்துள்ளார்.<br><br>அத்துடன், 2025.01.01 முதல் நடைமுறைக்கு வரும் கொள்முதல் வழிகாட்டி தொகுப்பின் 3.1.6 விதிமுறைக்கு அமைவாக, ஒரே நிறுவனத்திடமிருந்து மட்டுமே விலைமதிப்பீடுகள் கோரி இந்தப் பணியை மேற்கொள்ள முடியாததால், கட்டிடம்/தொழில்நுட்ப கணக்காய்வு மேற்கொள்வதற்கான விலைமதிப்பீடுகளை கோருவதற்கான தொழில்நுட்ப அம்சங்களை உள்ளடக்கிய விலைமனு ஆவணங்களை தயாரிப்பது சிக்கலானதாக இருப்பதை கருத்தில் கொண்டு, இத்துறையில் அனுபவமுள்ள ஒரு பொறியியலாளரை தொடர்புடைய மதிப்பீட்டு குழுவில் நியமிக்குமாறு DCS/AC/PRO/F03/02-Building/Technical Audit ஆம் இலக்க 2025.04.01 ஆந் திகதிய கடிதம் மூலம் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.<br>அந்த அமைச்சின் பொறியியலாளர் பணிச்சுமை காரணமாக இப்பணியில் ஈடுபட முடியாததால், மேற்கண்ட பணியை நிறைவேற்றுவதற்கு தேவையான அறிவும் திறனும் கொண்ட ஒரு பொறியியலாளரை கட்டிடத் திணைக்களத்திலிருந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் MF1/01/25CEN/EST-18(ii) ஆம் இலக்க 2025.05.08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளார்.<br><br>அதற்கமைய, இவ்விடயத்துடன் தொடர்புடைய DCS/Admin/MT/Building Audit ஆம் இலக்க 2025.05.15 மற்றும் 2025.06.04 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் கட்டிடத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட பின்னர், இது தொடர்பாக ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அக்கலந்துரையாடலில், கட்டிடத் திணைக்களத்தில் அதற்கான தேவையான உபகரணங்கள் இல்லாத காரணத்தினால் அந்தத் திணைக்களத்தால் கட்டிடம்/தொழில்நுட்ப கணக்காய்வு மேற்கொள்ள முடியாது எனவும், கட்டிடம்/தொழில்நுட்ப கணக்காய்வு மேற்கொள்ள ஒரு நிறுவனத்தைத் தேர்வு செய்வதற்காக விலைமதிப்பீடுகள் கோருவதற்கான தொழில்நுட்ப அம்சங்களை உள்ளடக்கிய விவரக்குறிப்பு ஆவணம் மற்றும் BOQ தயாரித்து சமர்ப்பிக்கும் திறன் தமக்கு இருப்பதாகவும் கட்டிடத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.<br>பின்னர், DCS/Admin/MT/14/ALUMINIUM ஆம் இலக்க 2025.06.20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் செய்யப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, கட்டிடத் திணைக்கள அதிகாரிகளுடன் 2025.07.01 அன்று மீண்டும் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அதன் பின்னர் 2025.07.07 மற்றும் 2025.07.08 ஆகிய இரு நாட்களில் கட்டிடத் திணைக்களத்தின் தொழில்நுட்ப அறிவு கொண்ட அதிகாரிகள் குழுக்களாக (கட்டிடக் கலை, கட்டுமானம், நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர், மின் பொறியியல் ஆகிய பிரிவுகளின் அதிகாரிகள்) வந்து, கட்டிடத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக இடத்திலேயே ஆய்வு செய்து தேவையான தகவல்களை பெற்றுக்கொண்டனர்.<br><br>பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சேவையளிப்பவரின் தேவைகளை உள்ளடக்கிய ஆவணம் (TOR) கட்டிடத் திணைக்களத்தினால் 2025.08.04 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர், அதனை அடிப்படையாகக் கொண்டு விலைமனு ஆவணங்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இதற்காக திணைக்கள முகாமைத்துவ கட்டணமாக ரூ.150,000.00 கட்டிடத் திணைக்களத்திற்கு செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கமைய, செலவுத்தலைப்பு எண் 252-01-01-1409-140 கீழ் |

| | | |
|---|---|---|
| | | ரூ.150,000.00 நிதி ஒதுக்கீடு நி.ஒ. 208 இன் கீழ் 2025.11.25 அன்று கட்டிடத் திணைக்களத்திற்கு மாற்றி வழங்கப்பட்டுள்ளது.<br><br>இவ்விடயத்துடன் தொடர்புடைய ஆலோசனை நிறுவனத்தைத் தேர்வு செய்வதற்கான கொள்முதல் செயல்முறையை ஆரம்பிப்பதற்காக, கொள்முதல் வழிகாட்டி தொகுப்பு (ஆலோசனை) 2007 இன் 2.6.3 விதிமுறைக்கு அமைவாக துறை ஆலோசனை குழுவொன்றை நியமிப்பதற்காக அதிகாரிகளின் பெயர்களையும் பரிந்துரைத்து அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. எனினும், இக்கொள்முதல் செயல்முறைக்கான செலவுத்திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டிய ஆலோசனை கொள்முதல் குழுவைத் தீர்மானிக்க வேண்டியதனால், செலவுத்திட்ட மதிப்பீட்டை சமர்ப்பிக்குமாறு அமைச்சு அறிவித்துள்ளது.<br><br>அதற்கமைய, இதற்கான தேவையான செலவுத்திட்ட மதிப்பீட்டை சமர்ப்பிக்குமாறு கட்டிடத் திணைக்களத்திற்கு 2026.04.02 திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பரிசோதனை பணிகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுக்கான மதிப்பீடுகளை தயாரிப்பதற்குத் தேவையான பட்டயப் பொறியியலாளர்கள் திணைக்களத்தில் இல்லாத காரணத்தினால் இதனை மேற்கொள்ள முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், முன்னதாக வாய்மொழியாக அறிவிக்கப்பட்ட பகுதியளவு அரச நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட செலவுத்திட்ட மதிப்பீடு அதிகமாக இருந்தபோதிலும், ஆலோசனை கொள்முதல் குழுவை நியமிப்பதற்காக அந்த மதிப்பீட்டு தொகை அல்லது அதன் சுமார் 75% அளவினைப் பயன்படுத்துவது பொருத்தமானது என கட்டிடத் திணைக்களம் 2026.04.21 திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளது.<br><br>தற்போது, இந்தப் பணியை மேற்கொள்ள தேவையான பொறியியல் நிபுணத்துவம் கொண்ட அதிகாரிகள் திணைக்களத்தில் இல்லாத காரணத்தால், வெளிப்புற தரப்பின் மூலம் அல்லது வேறு முறையில் ஆலோசனை குழுவை நியமிப்பதற்குத் தேவையான உத்தியோகபூர்வ மதிப்பீட்டை தயாரிப்பதில் சிக்கல்கள் தொடர்ந்தும் நிலவுகின்றன. மேலும், கட்டிடத் திணைக்களத்தின் மூலம் இந்தப் பணியை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், தேவையான பட்டயப் பொறியியலாளர்கள் தங்களிடம் இல்லையென அவர்கள் அறிவித்துள்ளனர்.<br><br>எனினும், கட்டிடத்தில் தற்போது காணப்படும் நீர் கசிவு உள்ளிட்ட குறைபாடுகளைச் சீர்செய்வதற்காக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>**நீர்கசிவு தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**<br><br>05வது மாடியில் அமைந்துள்ள விலை மற்றும் ஊதியங்கள் பிரிவின் கான்கிரீட் ஸ்லாபில் ஏற்பட்ட நீர்கசிவு தொடர்பான பழுதுபார்ப்பு பணிகள் 2025.12.13 அன்று நிறைவு செய்யப்பட்டுள்ளன. பழுதுபார்ப்பு பணிகளுடன் தொடர்புடையதாக 02 ஈரப்பதம் நீக்கும் (Dehumidifier) இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்விரு இயந்திரங்களின் மூலம் கான்கிரீட் ஸ்லாப் மேற்பரப்பில் தேங்கும் நீர் முழுமையாக உறிஞ்சப்படுகிறது. பழுதுபார்ப்பு பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br>01வது மாடியிலிருந்து 10வது மாடி வரை உள்ள பெண்கள் கழிப்பறைகளுக்கு இணைக்கப்பட்ட குழாய் அமைப்பு (நீர் குழாய்கள் மற்றும் கழிவுநீர் அமைப்பு) அமைந்துள்ள டக்ட் லைனில் (Duct Line) ஏற்பட்ட துளைகள் வழியாக நீர்கசிவு ஏற்பட்டது. அதற்கான பழுதுபார்ப்பு பணிகள் 2025ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br>கட்டிடத்தின் மின் உயர்த்தி இயந்திர அறை மற்றும் அதனுடன் |

| | | |
|---|---|---|
| | | தொடர்புடைய அனைத்து பகுதிகளும், 10வது மாடியில் உள்ள உணவுக்கூடத்தின் மேல் ஸ்லாப் பகுதியும் நீர்ப்புகா பணிகளுக்காக தொடங்கப்பட்டு, இதுவரை 90% பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br><br>இதன் இரண்டாம் கட்டமாக, 06வது மற்றும் 11வது மாடிகளில் உள்ள திறந்த வெளிப் பகுதிகள், குளிரூட்டும் நீர்தொட்டி அமைந்துள்ள பகுதி மற்றும் கட்டிடத்தின் அனைத்து வெளிப்புற சுவர்களையும் நீர்ப்புகாத வகையில் காப்பு செய்ய தேவையான மதிப்பீடுகளை வழங்குமாறு கட்டிடத் திணைக்களத்திற்கு 2026.04.27 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>**கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான சான்றிதழை வழங்கிய தனியார் ஆலோசனை நிறுவனத்தை கருப்பு பட்டியலில் (Black List) சேர்த்தல்.**<br><br>இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேசிய கொள்முதல் ஆணைக்குழுவிடம் ஆலோசனை கோரப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாக தேசிய கொள்முதல் ஆணைக்குழு, "ஆலோசனை சேவைகளை வழங்கும் நிறுவனங்களை கருப்பு பட்டியலில் சேர்ப்பதற்கான முறையான வழிகாட்டுதல்கள் இதுவரை உருவாக்கப்படவில்லை. எனினும், பிரதான கணக்குகூறும் அதிகாரியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு, தொடர்புடைய நிறுவனங்களை கருப்பு பட்டியலில் சேர்ப்பதற்காக நிறுவன மட்டத்தில் முறையான விசாரணை நடத்துமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்க வேண்டும். மேலும், அந்த செயல்முறை நியாயமான, சமத்துவமான மற்றும் வெளிப்படையானதாக இருக்க வேண்டும் என்பதை நிறுவனம் உறுதி செய்ய வேண்டும்." என அறிவுறுத்தியுள்ளது.<br>அதற்கமைய, திணைக்கள மட்டத்தில் முறையான விசாரணை நடத்துவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சிவில் பொறியியல் அதிகாரியின் தலைமைத்துவத்தில், கட்டிடத் திணைக்களத்தின் சிவில் மற்றும் மின் பொறியியல் அதிகாரிகள் இருவர் மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சட்ட அதிகாரி ஆகியோர் அடங்கிய குழுவொன்றை நியமிக்குமாறு பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார். அதற்கிணங்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.<br>இதனுடன் தொடர்புடையதாக, கட்டிடத் திணைக்களத்திலிருந்து பணிப்பாளர் நிர்மாணம் (வலயம் 3) மற்றும் ஒரு மின் பொறியியலாளர் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்திலிருந்து ஒரு பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், சட்ட அதிகாரியை எமது திணைக்களத்திலிருந்தோ அல்லது பிற நிறுவனங்களிலிருந்தோ நியமிக்குமாறு அமைச்சு மேலதிகமாக அறிவித்துள்ளது.<br>எனினும், இத்திணைக்களத்தில் சட்ட அதிகாரி இல்லாத காரணத்தால், தற்போது சட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ள போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சுகளுக்கு சட்ட உதவியை வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு 2026.03.23 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் சட்ட அதிகாரியின் உதவியைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.<br>அதற்கமைய, மேற்படி அதிகாரிகளும் திணைக்கள அதிகாரிகளும் அடங்கிய குழு 2026.05.06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நியமிக்கப்பட்டுள்ளது. |
| 7. | **அச்சுப்பிரிவு மற்றும் பழைய அலுவலக வளாகத்தில் காணப்படும் குறைபாடுகள் திணைக்களத்தின் புதிய கட்டிடத்தை வடிவமைக்கும் போது, அச்சுப்பிரிவை அந்த** | இலக்கம் 16/7 இல் அமைந்துள்ள அச்சகப் பிரிவு வளாகத்திற்குட்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களை ஆய்வு செய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. அதன்படி, அந்த குழு தனது பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது. இப்பரிந்துரைகளின் அடிப்படையில், தற்போது உள்ள நான்கு கட்டிடங்களில் இரண்டு கட்டிடங்களை மேலதிக அபிவிருத்திகளுடன் தற்போதைய நிலையில் பராமரிக்க |

| | | |
|---|---|---|
| | **கட்டிடத்தின் உள்ளே நிறுவுவதற்காக திட்டமிடப்படவில்லை என்பது தொடர்பாக கணக்காய்வில் கண்டறியப்பட்டுள்ளது.**<br>**அச்சுப்பிரிவை திணைக்களம் அமைந்துள்ள புதிய கட்டிட வளாகத்திற்குக் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறு குறித்து குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.** | பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தற்போது, இரண்டு மாடிக் கட்டிடங்களில் ஒன்றின் தரைத்தளம் அச்சகப் பிரிவின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மற்றைய ஒற்றை மாடிக் கட்டிடத்தைப் புதுப்பிப்பதற்காக கட்டிடத் திணைக்களத்திடமிருந்து மதிப்பீடுகள் கோரப்பட்டுள்ளன. புதுப்பிப்பு பணிகள் நிறைவடைந்த பின், அது களஞ்சியமாக பராமரிக்கப்படும்.<br>மேலும், மற்றைய இரண்டு மாடிக் கட்டிடமும் ஒற்றை மாடிக் கட்டிடமும் சேதமடைந்த நிலையில் உள்ளன. ஆகையால், அவை பயன்படுத்தக்கூடிய நிலையிலுள்ளனவா என்பதைத் தீர்மானிக்க சிறப்பு தொழில்நுட்ப நிபுணத்துவம் கொண்ட நிறுவனமொன்றின் மூலம் ஆய்வு செய்யுமாறு குழு பரிந்துரைத்துள்ளது. அதற்கமைய, தேவையான ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு 2026.01.22 அன்று தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது. தற்போது அதற்கான மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தேவையான கட்டணங்கள் செலுத்தப்பட்டு அறிக்கை பெறப்பட்ட பின், தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.<br>இதனுடன், தினசரி உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருந்த கூரைகள், வடிகால் அமைப்புகள், வாகன நிறுத்துமிடம் மற்றும் வாயில்கள் போன்ற கட்டிட மற்றும் வளாக குறைபாடுகள் திருத்தப்பட்டு முறையான நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், வளாகத்தின் பல இடங்களில் குப்பைகள், பழைய உதிரிப்பாகங்கள் மற்றும் கழிவுப்பொருட்கள் குவிந்திருந்ததால், அவற்றை அகற்றி அச்சகப் பிரிவு வளாகத்தை சுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>திணைக்களத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப அதிகாரியும் களஞ்சியம் தொடர்பான நடவடிக்கைகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அந்த பரிந்துரைகள் தொடர்பாகவும் தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

பாராளுமன்றத் தொடர் இலக்கம் 489 குறிப்பின் படி, நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தொடர்பில், பொது கணக்குகள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் தொடர்பான தகவல்களை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

**கே. எம். டி. எஸ். டி. கருணாரத்ன**

பணிப்பாளர் நாயகம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்